[13th March 1963]

படி ஆவதால் பாஸ் செய்த மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குப் போவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறதே ? ஆகவே இந்த 3 மாதத்தைக் குறைத்து வயதை நிர்ணயிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிபபார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 14 வயது 6 மாதம் at the time of admission into the Pre-University Course. அவர்கள் அதை முடிப்பதற்கு 15 வயது 9 மாதம் ஆகும். சரியான முறையிலே ஒரு ஆண்டிலே தேர்ச்சி பெறுவார்களேயானால், தேர்ச்சி பெற்ற பிறகு, ஜூலையில் அட்மிஷன் ஆகிற காரணத்தினால், அக்டோபரில் அவர்களுக்கு 16 வயது பூர்த்தியாகவேண்டும் என்று இண்டியன் மெடிகல் கவுன்சில் ஒரு கொள்கை வகுத்திருக்கிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான அதிகபட்ச வயது எவ்வளவு என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது ? அதில் மாற்றம் ஏதேனும் செய்ய எண்ணம் உண்டா?

கனம் சபாநாயகர் : மாக்ஸிமம் ஏஜ் எவ்வளவு என்று கேட்கிறார்கள். 25 வயது, 30 வயது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்று கேட்கிறார்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கான அதிகப்படியான வயது எவ்வளவு என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது ? அதில் ஏதேனும் மாற்றம் காண எண்ணம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மாக்ஸிமம் வயது ஒன்றும் குறிப்பிடவில்லை. ஏற்கனவே வயது குறைவாக உள்ளவர்கள் அட்மிஷன் கேட்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இருபத்தைந்து வயது, முப்பது வயது வந்தவர்கள மருத்துவக் கல்லூரியில் சேர விரும்பினால், அவர்கள் அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிப்பட்ட கேள்வி போட வேண்டும்.

Coal (Chingleput district)

* 214 *Q.*—Sri V. SANKARAN :
Pulavar K. GOVINDAN :
Sri S. MADHAVAN :
Sri RAMA ARANGANNAL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a large deposit of coal was discovered recently in Chingleput district; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have received reports of occurrence of coal in Chingleput district, but it would be very premature to say that deposits which can be worked economically have been located. The Director-General, Geological Survey of India, has been asked to send a detailed report in the matter and his reply is awaited.

புலவர் கா. கோவிந்தன் : இங்கே கிடைக்கிற நிலக்கரியையும், திருக்கழுக்குன்றத்தில் கிடைக்கிற இரும்பையும் வைத்துக்கொண்டு ஒரு உருக்கு ஆலையை அமைக்கவும், அதை வெளிநாட்டுக்கு அனுப்பி பரிசீலனை செய்வதற்கு மகாபலிபுரத்தை ஒரு நல்ல துறைமுகமாக முன்கூட்டியே அமைக்க முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இங்கே நிலக்கரி கிடைக்கிறதா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அங்கே இரும்பு இருக்கிறதா என்பதைப் பற்றி பரிசீலனை கூட ஆரம்பிக்கவில்லை. இதை எலலாம் வைத்துக் கொண்டு வெளி நாட்டிற்கு அனுப்பிப் பரிசிலனை செய்தால் என்ன பலன் கிடைக்கும் ?

திரு. இரா. நெடுஞ்செழியன் : செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நிலக்கரிப் படிவங்களை ஆராய்ச்சி செய்திருக்கிற ஆராய்ச்சியாளர்கள், இதுவரை அரசாங்கத்திற்கு ஏதாவது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்களா ? அப்படியானால், அது சபை முன் வைக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : முன்பு எல்லாம் ஒரு நியதி உண்டு. ஜியாலாஜிகல் சர்வே ஒரு இடத்தில் கனிப் பொருள் இருக்கிறது என்று கண்டுபிடித்தால், அதை வெளியிலே சொல்லக்கூடாது. ஜியலாஜிகல் சர்வே ஆப் இந்தியாவுக்கு எழுதி அனுப்ப வேண்டும். அவர்கள் பரிசீலனை செய்து, கருப்பாக இருப்பதெல்லாம் நிலக்கரிதானா என்று கண்டுபிடிக்க வேண்டும். அதனுடைய காலோரிபிக் வேல்யூ என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும். கோக்கிங் தன்மை எப்படியிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் நிலக்கரி இருக்கிறதா என்று சொல்ல வேண்டும். ஆனால் நம் நாட்டிலே கருப்பாக இருப்பதெல்லாம் இரும்பு என்றும், வெளளையாக இருப்பதெல்லாம் மைக்கா என்றும் நினைக்கக்கூடிய சம்பிரதாயம் இருந்துவருகிறது. இப்பொழுது திட்டமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : காஞ்சீபுரத்திற்குப் பக்கத்திலே நிலக்கரி இருப்பதாக அண்மையில் ஒரு செய்தியைப் பார்த்தோம். அது எந்த நிலையில் உள்ளது ? நிலக்கரிப் படிவங்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பரிசிலனை முடிந்த பிறகுதான் எந்த விவரமும் கொடுக்க முடியும்.

English Language Teaching Campaign

*215 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have started an English Language Teaching Campaign in the State; and

(*b*) if so, whether there is any proposal to include this in the Training Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A number of training school teachers have already been trained under the Madras English Language Teaching Campaign. There is a proposal under consideration to train the remaining Training School teachers in the up-to-date methods of English teaching.

English in Elementary Schools

*216 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to introduce English in the III Standard in Elementary schools from the next School year; and